கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம். திருமங்கலம்

**18.04.2023**

**அசல் வழக்கு எண். 100/2018**

**வா.சா. 1 – ராமச்சந்திரன்**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி.**

**ஆரம்பித்த நேரம் : 12.25 PM**

வாதி தாக்கல் செய்துள்ள வழக்கிற்கு நான் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். அந்த எதிர்வழக்குரையில் பத்தி 11ல் கடைசி வரியில் வாதியானவர் சங்கத்தின் முக்கிய பதவிக்கு வந்துவிட்டார் என்று சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். சொல்லியுள்ளேன். ஆர்.நாராயணன் என்பவர் இறந்துவிட்டதாகவும், எ.ராமையா என்பவருக்கு வயதாகி உடல்நிலை சரியில்லாமல் இருந்ததால் பாதர் வெள்ளை முக்கிய பதவிக்கு வந்துவிட்டார் என்ற காரணத்தை சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். ஆனால் அந்த முக்கிய பதவி என்ன பதவி என்ற விபரத்தை என் எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். முக்கிய பதவிக்கு எந்த வருடம், எந்த தேதியில் பொறுப்புக்கு வந்ததாக சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். முக்கிய பதவி என்பது பொது காரியதரிசி என்ற பதவியைக் குறிக்கும் என்று சொன்னால் சரிதான். முக்கிய பதவிக்கு வந்தபிறகு வாதி சங்கத்திற்காக எந்த சொத்தும் வாங்கவில்லை என்று சொன்னால் சரிதான். பாதர் வெள்ளை வாதி சங்கத்தின் செயலாளர் என்ற முறையில் இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு அவருக்கு எல்லா உரிமையும் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. பஞ்சாலை தொழில் சம்மந்தமாக எனக்கு எத்தனை வருடம் அனுபவம் உள்ளது என்று கேட்டால் 1969 முதல் தற்போது வரை அனுபவம் உள்ளது. தமிழ்நாட்டில் உள்ள பஞ்சாலைகள் 1972 முதல் 1992 வரை நல்ல இலாபத்தில் இயங்கி வந்தது என்று சொன்னால் சரிதான். சீதாலெட்சுமி மில் நிர்வாகம் சுமார் 7 பஞ்சாலைகள் நடத்தி வந்தது என்று சொன்னால் சரியல்ல 9 பஞ்சாலைகளை நடத்தி வந்தது. சீதாலெட்சுமி மில்

உட்பட மற்ற பஞ்சாலைகளையும் மூடிவிட்டனர் என்று சொன்னால் சரியல்ல. ஒரு சில மில் இயங்குகின்றன. 5 மில்கள் மூடப்பட்டுவிட்டன. 4 மில்கள் ஓடிக்கொண்டிருக்கிறது. அந்த 5 மில்களில் சீதாலெட்சுமி மில்லும் அடங்கும் என்று சொன்னால் சரிதான். 2011ம் வருடம் மூடப்பட்டது. 1992 வருடத்திற்கு பிறகு மீனாட்சி மில் அதிக நஷ்டத்தில் இயங்கியதால் மூடப்பட்டுவிட்டது என்று சொன்னால் சரிதான். மிசோரியர் மில்லும், மாப்பிள்ளை விநாயகர் மில்லும் தான் நடத்தி வந்த பஞ்சாலைகளை மூடிவிட்டது என்று சொன்னால் நிர்வாக கோளாறு காரணமாக அந்த மில்கள் மூடப்பட்டு விட்டன. பஞ்சாலைத் தொழில் நஷ்டத்தில் இயங்கி வந்ததால் ஏராளமான மில் தொழிலாளர்கள் வேலை இழக்க நேரிட்டனர் என்று சொன்னால் சரிதான். துணை விதிகளின் படி ஒவ்வொரு தொழிலாளரும வாதி சங்கத்திற்கு வருடத்திற்கு ரூ.100 சந்தா செலுத்த வேண்டும் என்று சொன்னால் சந்தா தொகை செலுத்த வேண்டும். ஆனால் எவ்வளவு சந்தா தொகை செலுத்த வேண்டும் என்பது அந்தந்த கால கட்டங்களில் உள்ள சூழ்நிலைகளுக்கு தக்கவாறு மாறும். மில் தொழிலாளர்கள் வேலை இழந்ததால் ஏராளமான மில் தொழிலாளர்கள் ஆண்டு சந்தா தொகையை கட்ட தவறிவிட்டனர் என்று சொன்னால் சரிதான். தொழிலே இல்லாதபோது அவர்களால் சந்தா தொகை கட்ட இயலவில்லை. வாதி சங்கத்திலும் கடந்த 20 வருடங்களுக்கு மேலாக பொருளாதார சிரமங்கள் ஏற்பட்டது என்று சொன்னால் அவர்களுக்கு சிரமங்கள் இல்லை. மில் தொழிலாளர்கள் சந்தா தொகையை செலுத்தாததால் வாதி சங்கம் கடுமையான பொருளாதார நெருக்கடிக்கு உள்ளானது என்று சொன்னால் சரியல்ல. அவர்களுக்கு பொருளாதாரம் பல வழிகளில் வருகின்றது. அதனால் பொருளாதார நெருக்கடி அவர்களுக்கு ஏற்பட வாய்ப்பில்லை. பொருளாதார நெருக்கடி ஏற்பட்ட சூழ்நிலையில் சங்கத்தின் செயலாளர் ஒரு சென்ட் நிலம் கூட வாங்கவில்லை என்று எதிர்வழக்குரை பாரா 12ல் சொல்லியுள்ள விசயங்கள் தவறு என்று சொன்னால் சரியல்ல. எதிர்வழக்குரை பத்தி 12 ல் சங்கம் தோன்றிய காலத்தில் இருந்து வாங்கிய

சொத்துக்களை விற்றுவிட்டார் என்றும், அந்த பணத்திற்கு செலவு கணக்கு எழுதிவருகின்றார் என்று சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். ஆனால் செயலாளர் சங்கத்தின் பணத்தை முறையின்றி செலவு செய்கின்றார் என்றோ, பொய்கணக்கு எழுதிவருகின்றார் என்றும் எதிர்வழக்குரையில் குற்றச் சாட்டுகளை முன்வைக்கவில்லை என்று சொன்னால் சரிதான். அவ்வாறு அவர் கிரையம் செய்தது முறையற்றது என சங்க உறுப்பினர்கள் எவரும் அவர் மீது புகார் எதுவும் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. வாதி சங்க தலைவர் ஆர்.நாராயணன் அவர் மீது நடவடிக்கை எடுத்துள்ளார். வாதி சங்க தலைவர் ஆர்.நாராயணன் அவர் மீது நடவடிக்கை எடுத்துள்ள விபரத்தை என்னுடைய எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்று கேட்டடால் ஞாபகம் இல்லை. நான் சொல்வதுபோல் நாராயணன் வாதி மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் அதனால்தான் என்னுடைய எதிர்வழக்குரையில் இதுசம்மந்தமாக தகவல்கள் சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்வதுபோல் சங்கத்தன் பணத்தை முறையின்றி செலவு செய்கின்றார் என்றோ, பொய் கணக்கு எழுதுகின்றார் என்றோ, கையாடல் செய்து விட்டார் என்றோ, சங்க உறுப்பினர்கள் யாரும் அவர்மீது சட்டபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கவில்லை என்று சொன்னால் இதுவரைக்கும் இல்லை. பாதர் வெள்ளை வாதி சங்கத்தின் பொதுச்செயலாளராக கடந்த 37 வருடமாக வாதி சங்கத்தில் இருந்து வருவதற்கு உறுப்பினர்கள் எவரும் ஆட்சேபனை செய்யவில்லை என்று சொன்னால் உறுப்பினர்கள் செய்யவில்லை. தலைவர் நடவடிக்கை எடுத்திருந்தார். பொதுச்செயலாளர் பதவியில் இருந்து அவரை நீக்க வேண்டும் என்றோ, அல்லது பொதுச்செயலாளர் பதவியில் இருந்து தகுதி நீக்கம் செய்ய வேண்டும் என்றோ அவர் மீது யாரும் நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான். எதிர்வழக்குரை பத்தி 12 ல் தாவா சொத்தை விற்று செலவு செய்யும் நோக்கத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்று சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். வாதி சங்கம் கடந்த 53

வருடங்களாக இயங்கிவருகின்றது என்று சொன்னால் சரிதான். 1975ல் தமிழ்நாடு சங்கங்களின் பதிவு சட்டம் நடைமுறைக்கு வந்தது என்று சொன்னால் 1926ம் வருடம் நடைமுறைக்கு வந்தது. 1947 பதிவு சங்க சட்டத்தின்படி பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு சங்கமும் வருடத்திற்கு ஒருமுறை பொதுக்குழு கூட்ட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. அந்தந்த சங்கங்களின் துணைவிதிகளில் கால நிர்ணயம் செய்தபடி பொதுக்குழு கூட்டுவார்கள். பொதுவாக ஒவ்வொரு சங்கமும், ஒவ்வொரு வருடமும் பொதுக்குழு கூட்டவேண்டும் என்று நிர்ணயம் செய்வார்கள் என்று சொன்னால் சரிதான். அவ்வாறு பொதுக்குழு கூட்டும்போது ஆண்டு அறிக்கையும், வருடாந்திர செலவு கணக்குகளையும் தாக்கல் செய்வார்கள் என்று சொன்னால் சரிதான். வாதிசங்கத்தின் செயலாளர் ஒவ்வொரு வருடமும் ஆண்டுக்கொருமுறை வருடாந்திர செலவு கணக்குகளை தாக்கல் செய்யவில்லை என்றோ, ஆண்டறிக்கையை தாக்கல் செய்யவில்லை என்றோ என் எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். பொதுக்குழுவால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒவ்வொரு சங்கங்களின் ஆண்டறிக்கையையும், வரவு செலவு கண்கருகளையும் ஒவ்வொரு வருடமும் சங்கங்களின் மாவட்ட பதிவாளருக்கு அனுப்பவேண்டும் என்று சொன்னால் சரிதான்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு வேறு ஒரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

**முடிவடைந்த நேரம் : 12.50 PM**